When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது
என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூபா 3-50

கடர் 5: சுக்கில ஞு பங்குனி மீ 27 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ரமழான் பிறை 12 (09-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 55

## வடக்கு - கிழக்கு மாகாண சபையில்
# தகுதி இல்லாமல் வேலை பெற்ற
# அனைவரும் பதவி நீக்கப்படுவர்!

### அவசர அவசரமாக கடைசி நேரத்தில் நியமிக்கப்பட்டவர்களுக்கும் அதே கதி

திருகோணமலை, ஏப்ரல் 9

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் முன்னர் சேவைக்கு அமர்த்தப்பட்டவர்களில் அடிப்படைத் தகுதி இன்றி நியமிக்கப்பட்ட அனைவரும் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளனர்.

இத்தகவலை வடக்கு, கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன் உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

அடிப்படைத் தகுதியில்லாத அனைவரையும் பதவி நீக்கம் செய்யுமாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் நளின் செனவிரத்னா தமக்கு அவசர உத்தரவு விடுத்திருப்பதாக பிரதம செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து 12 ஆம் திகதி வரை மாகாண சபை அரசாங்கத்தால் அவசர அவசரமாக நியமிக்கப்பட்ட அனைவரும் பதவிநீக்கம் செய்யப்படுவர் என்றும் -

பெப்ரவரி மாதக் கடைசி வாரத்தில் மாகாண அரசால் நியமிக்கப்பட்டவர்கள் குறித்துப் பூரண விசாரணை நடத்தப்படும் என்றும் – தெரிவிக்கப்பட்டது.

எனினும் மாகாணசபைக்குச் சேர்க்கப்பட்ட 700பட்டதாரிகளுக்கு தொடர்ந்து வேலை வழங்கப்படும் எனவும் அறிய வந்தது.

பட்டதாரி ஆசிரியர்களாகவும் முகாமைத்துவ பயிற்சிக்கெனவும் ஏனைய சில பதவிகளுக்கும் சேர்க்கப்பட்ட இந்த பட்டதாரிகளைத் தொடர்ந்து சேவையில் வைத்திருப்பதற்கு ஆளுநர் விருப்பம் தெரிவித்துள்ளார் என்று மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பதவி நீக்கம் செய்யப்படுவோருக்கு மார்ச் மாதச் சம்பளம் வழங்கப்படும் எனவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-உ)

## சுவாமிஜி இறைபதம் எய்தினார்

கொழும்பு, ஏப்ரல் 9

வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷனில் 33 வருடங்கள் சேவை புரிந்த சுவாமி பிரேமாத்மானந்தஜி பம்பாயில் இறைபதம் எய்தினார்.

இறக்கும் போதுசுவாமிஜிக்கு வயது 87.

1954 இல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனை பொறுப்பேற்ற சுவாமிஜி 1987 வரை அங்கு பணியில் ஈடுபட்டு வந்தார்.

உடல் நலக்குறைவு காரண

(5ஆம் பக்கம் பார்க்க)

## றோலரால் நெரித்து ஆயுதங்கள் அழிப்பு!

கொழும்பு, ஏப் 9

தென்னிலங்கைத் தீவிரவாதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட, பாவிக்க முடியாத ஆயுதங்கள் நேற்று இராணுவத் தலைமை அலுவலகத்தில் வைத்து அழிக்கப்பட்டன.

மொத்தம் 2, 200 ஆயுதங்கள் மீது பெரும் ''றோலர்'' கள் செலுத்தப்பட்டு அவை நொறுக்கி அழிக்கப்பட்டன.

இந்த வைபவத்தில் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னாவும், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா ஆகியோரும் கலந்து கொண்டு ஆயுதங்கள் அழிக்கப்படுவதைப் பார்த்தனர்.

தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் 2, 236 பயன்படுத்தக் கூடிய நிலையில் இருந்ததால் அவை அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. (அ)

### கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப் 9

யாழ்மாவட்ட கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் கலந்து கொள்ளும் கருத்தரங்குஒன்று இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ் மனோகரா தியேட்டரில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி கருத்தரங்கில் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள், இயக்குனர்கள், முகாமையாளர்கள், கணக்காளர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

விடுதலைப்புலிகள் தரப்பில் திரு இ இராஜன், திருடொமினிக் ஆகியோர் பங்குபற்றுவர். [ஒ-5]

## வடக்கு - கிழக்கு புனரமைப்பு விசேஷ மாநாடு 20 இல்

வடக்கு கிழக்கு புனரமைப்பு வேலைகள் பற்றி ஆராயும் விசேஷ மாநாடு எதிர்வரும் 20 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும்.

மாகாணசபை ஆளுநர் திரு. நளின்செனவிரத்தினா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் அரச அதிபர்களும், உதவி அரசாங்க அதிபர்களும், புனரமைப்புக்கு பொறுப்பான அதிகாரிகளும் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

புனரமைப்பு வேலைகளை எந்த வகையில் விரைவுபடுத்துவது என்பது பற்றி ஆராயப்படும். (இ-3)

### புதிதாக தெரிவுசெய்யப்படும்
## தமிழ் நிர்வாக அதிகாரிகளுக்கு தமிழிலேயே பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப் 9

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விரைவில் நடைபெறவுள்ள நிர்வாக அதிகாரிகளுக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவாவோருக்கு தமிழில் பயிற்சியளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்குவெற்டங்கள் உள்ளன.

இந்த வெற்றிடங்களை நிரப்ப வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன.

பெரும்பாலும் ஜூன் மாதம் நியமனங்கள் வழங்கப்படலாம். என எதிர்பார்க்கப்படுகிறது.

தெரிவு செய்யப்படுவோருக்கு இலங்கை மன்றக் கல்லூரியில் தமிழில் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது.

## பீனிசம் நோய்க்கு ஆயுள்வேத மருந்து
### ஆராய்ச்சி நடக்கவுள்ளது

யாழ்ப்பாணம், ஏப் 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவிவரும் பீனிசம்('கற்றா') நோயைக் குணப்படுத்த ஆயுள்வேத மருந்து ஒன்றைத் தயாரிக்கும்முகமாகஆராய்ச்சி மேற்கொள்ளப்படவுள்ளது.

லங்கா ஆயுள்வேதக் கல்லூரி அதிபர் டாக்டர் ப. றோமகேஸ்வரன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினரும் வட இலங்கை அக்குபங்சர் சங்கத்தினரும் இணைந்து நேற்று நாவலர் மண்டபத்தில் நடத்திய டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 235 ஆவது ஞாபகார்த்த விழாவில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் ஒழிக்கப்படுகின்றன
### 16 ஆம்திகதி அமுலுக்குவருகின்றன

திருகோணமலை, ஏப்ரல் 9

பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் ஒழிக்கப்பட உள்ளன. இனி ஒரு மாவட்டத்துக்கு ஒரு கல்விப் பணிப்பாளர் மட்டுமே இருப்பார்.

வடக்கு கிழக்கு மாகாண சபையின்கல்விகலாசார அமைச்சின் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராசா இதனை நேற்று திருகோணமலையில் தெரிவித்தார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் புதிய திட்டம் அமுலுக்கு வருகிறது.

அதிகாரப் பரவலாக்கலே இதன் நோக்கம்என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவி ஒழிக்கப்படுவதை தொடர்ந்து தற்போது யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமை ஆற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி பெரியதம்பி அனேகமாக கிளிநொச்சியில் கல்விப்பணிப்பாளராகப் பதவி ஏற்கலாம். அல்லது திருகோணமலையில் மாகாணச உள்ளபை அலுவலகத்துக்கு இடமாற்றம் பெறலாம் என்று கூறப்படுகிறது. (இ-உ)

## தமிழக மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஏப் 9

விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த வேளையில் இந்த மீனவர்கள் நேற்று முன்தினம் பிடிபட்டனர்

107 படகுகளுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் தமிழ் நாட்டின் அறந்தாங்கி மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டப் பட்டினம், ஜகதா பட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டது.

இதேவேளை – விடுவிக்கப்பட்ட படகுகளில் 75 படகுகள் நேற்று புதுக்கோட்டை வந்து சேர்ந்ததாக தமிழக அரசு நேற்றிரவு அறிவித்தது.

கடந்த சில நாட்களுக்கு முன்னரும் தமிழக மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே. (ஒ-9)

### இன்று சிரமதானம்

தியாக மரணமடைந்த அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நடேஸ்வராக்கல்லூரி மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட சிரமதான வைபவம் இன்று காலை 9 00 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது .

## ஜனாதிபதி - பிரபா சந்திப்பு கௌரவமான இடத்தில்!
### நாடாளுமன்றில் ரஞ்சன் தகவல்

கொழும்பு, ஏப். 9

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனுக்கும் இடையேயான உச்சி மாநாடு இருதரப்பினருக்கும் கௌரவமான இடத்தில்நடைபெறும்,

இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்,

கேகாலை மாவட்டச் சுதந்திரக்கட்சி எம் பி தர்மசிறி சேனநாயக்க ஒத்திவைப்புப் பிரேரணையின்மீது விடுத

(5 ஆம் பக்கம் பார்க்க)

### அன்னை பூபதி நினைவு:
## எழுச்சி தினமாகக் கொண்டாட அமைப்புகளுக்குக் கோரிக்கை

காங்கேசன்துறை, ஏப் 9

தமிழ் மக்களின் விடிவிற்காக தன்னை அர்ப்பணித்த அன்னை பூபதியின் நினைவஞ்சலியை இன்றுமுதல் 19 ஆம் திகதிவரை எழுச்சி தினமாகக் கொண்டாடுவதற்கு விடுதலைப் புலிகள் பொது அமைப்புக்களின் பங்களிப்பை கோரியுள்ளனர்.

காங்கேசன்துறைப் பகுதி சனசமூக, கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளுடன் காங்கேசன்துறை அலு

(5 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

09-04-1990

சுபநேரம்:
12-07முதல் 01-37 வரை

இராகுகாலம்
07-37 முதல் 09-07 வரை

## மாகாணசபையின் கூட்டத்தை கொழும்பில் கூட்டுவதற்கு முயற்சி!
### அறிவிப்பு இன்று வெளியாகும்?

கொழும்பு: ஏப். 9

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கூட்டத்தைக் கொழும்பில்விரைவில் நடத்த ஈ. பி. ஆர். எல். எவ், இயக்கம் திட்டமிட்டுவருவதாக கொழும்பில் செய்தி வெளியாகியிருக்கிறது.

இந்தவிடயம்குறித்து ஈ. பி. ஆர், எல், எவ்வின் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று மாலை கொழும்பில் வெளி

(5 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



ஆக்களை அழிச்ச ஆயுதங்களை அமைச்சர் மேற்பார்வையிலை 'ஆமி' அழிச்சிருக்குதோ ....? ஆமி எண்டால் அழிக்கிற வேலை தான் செய்யுமோ....?

## பத்திரகாளி ஆலய தீர்த்தத்தில் சிங்களப் பக்தர்கள் வழிபாடு

திருகோணமலை, ஏப் 9

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய தீர்த்தோற்சவம் நேற்றுக்காலை சிறப்பாகநடைபெற்றது. ஆயிரக் கணக்கான தமிழ், சிங்களப் பக்தர்கள்பக்திப் பரவசம் பொங்க உற்சவத்தில் கலந்து கொண்டு அம்பாள் தரிசனம் பெற்றனர்.

கடந்தகாலங்களில்அம்பாள் முற்றவெளியூடாகவே தீர்த்தச் சமுத்திரத்துக்கு தீர்த்தமாடச் செல்வது வழக்கமாக இருந்தது.

இம்முறை சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### நோன்பு திறக்கும் நேரம்

9-4-90

ஸஹர் முடிவு – 4 – 30

நோன்பு திறக்கும் நேரம் – 6 – 20

COMMERCIAL BANK

கடந்த காலங்களில் பல இன்னல்களுக்கு மத்தியிலும் மகத்தான சேவையாற்றி மக்கள் மனதில் நிரந்தர இடத்தைப் பெற்றிருக்கும் இலங்கை வர்த்தக வங்கி யாழ்க் கிளை எமது பாரம்பரியத்தை பேணும் வகையில் எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று 14 - 4 - 1990 காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை கூடும் சுபவேளையில் வாடிக்கையாளர்களுக்கு பல புத்தாண்டுச் சலுகைகளையும், பரிசுகளையும் வழங்க இருப்பதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

உங்கள் ஆதரவுடன் மென்மேலும் எமது பணி தொடர அன்புடன் வருக வருகவென அழைக்கிறது உங்கள் இலங்கை வர்த்தக வங்கி.

முகாமையாளர்.

(சி-4441)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Toshiba Vidio Casset te Recorder V.87 Ms வெளி நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டு இரண்டு மாதங் கள் பாவித்த நிலையில் ரசீ துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Kumaran Tour -ist Ian 67 Stanley Road Jaffna. (12294)

பூரண விளைத் திறனு டைய பம்பாய் வெண்காய விதை ரம்பூர் சிகப்பு ரகம் விற்பனைக்கு உண்டு. கிலோ 375 ரூபா பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம். (3215)

உழவு இயந்திரத்தில் (Tractor) பூட்டிச்சேறடிக்கும் T இரும்பு வீல், முன் றோதை அச்சு, குடம், AC பம்ப், இன்னும் சில உதிரிப்பாகங் கள், எலெக்ரிக் டிரலர் (Electric Driller with stand) இரும்பு வேலை ஆயுதங்கள் க. பொன்னம்பலம். "கற் பகதரு" கொல்லன் கலட்டி, தெல்லிப்பளை. [3207]

தியேட்டர், அலுவலகம் வீட்டுப் பாவனைக்குரிய கதி ரைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். குமரன் ரூரிஸ். இன், 67, ஸ்டான்லி, வீதி, யாழ்ப் பாணம். (12289)

### தேவை

மடப்பள்ளி வேலை செய் வதற்குரிய பரிசாரகர் ஒருவர் தேவை. த--தியானவர் உடன் தொடர்பு கொள்ள வும். தகுந்த சம்பளம் வழங் கப்படும். தொடர்பு கொள் ளும்] முகவரி வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ் தானம், நாச்சிமார் கோவில், யாழ்ப்பாணம். (12165)

### மலிவு விற்பனை

இதோ அரிய சந்தர்ப்பம். ஸ்கேட், பிளவுஸ், லேடிஸ் கவுண், T-சேட், பேபிகவுண், பேபிசூட், மற்றும் றெடிமேட் உடைகளுக்கு விஜயம் செய் யுங்கள் (6. 4. 90 - 13. 4. 90 வரை) Fasheion, Garments, 20,22, கடைச்சாமி வீதி,OFF நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3230)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

தனிச் சிகப்பு, கறுப்பு, நிற சேவல் (பிலிமத்)கறுப்பு புள்ளி சேவல் (LOHMAN) பிறவுண் சேவல், புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, வெள்ளை பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 11-4-90 புதன்கிழமை விநியோகிக்கப் படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல-9 கந்தையா லேன், சுன்னாகம் (புகையி ரத நிலையத்திற்கு அருகில்) (3226)

### புத்தக ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர்விகடன், யூனியர் போஸ்ட், இதயம், குங்குமம், இந்தியா ருடே, (தமிழ் - ஆங் கிலம்)பொறின்லைன், ஸ்போ ட்ஸ்ரார், ஏனைய எல்லா இலங்கை இந்திய சஞ்சிகை களும். மீண்டும். பதிவு செய் யப்படுகின்றன. V.P. யிலும் பெறலாம். ஸ்ரீகாந் புத்தக சாலை. இல 165. மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (சி/4227)

### வகுப்புகள்

Radio Tv Deck Air Cond -itioning Refrigar ation வயறிங் வெல்டிங் வைன்டிங் பிளம்பிங் மோட்ட மெக்சனி ஷம் Typing Spoken English புதிய பிரிவுகள் |விரைவில் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறை பயிற்சி களுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழும் வழங் கப்படும் Vispa Enginee ring Aid Hall 328, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (12175]

### பரீட்சை

லண்டன் (Pitman) Typi ng Shorthend யூலைப் பரீட் சைக்கு தோற்ற விரும்பு வோர் 14-4-1990 இற்கு முன் எம்முடன் தொடர்புகொள்ள வும். Bond Institu tes, 58A ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி/4262)

### Make up Classes

Make up and Hair Dressing வகுப்புகள்இந்தக்கிழமை ஆரம்பமாகஇருக்கிறது. விரும் பியவர்கள்தொடர்புகொள்ள வும்: Yogi Beauty Parlour, 71 B Nayanmar Road, (off Kachcheri Nallur, Road) Nallur, Jaffna. (12287)

### தாதிப்பயிற்சி

தாதிப்பயிற்சி 1990 91க் கான விண்ணப்பங்கள் ஏற்கப் படுகின்றன. எமது அலுவல கத்தில் கிடைக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் மாத் திரம் விண்ணப்பிக்கவும். மகப் பெறுவும், பிணிதீர்மனையும் சங்கானை. (3231)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணிதபஞ்சாங்கம் வியா பாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக் குண்டு. ஸ்ரீ காந் புத்தக சாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன் பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### வாடகைக்கு

சிங்கப்பூர் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத் தம் புதிய தலை நகை கேட்டனை செட், எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ராசி சில்க்ஸ் 70, நியூ மார்க் கட், யாழ்ப்பாணம். (சி/4129)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங் கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/4209)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் கறுப்பு [பிலிமத்) சேவற் குஞ்சுகள், Golden Comet, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் HiSex பிற வுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள். முறையே ஒவ்வொரு செவ்வாய், புதன் வியாழக்கிழமைகளில் விநி யோகிக்கப்படும். முன் கூட் டியே பதிவு செய்க. சற்குண ராஜா அன் பிறதர்ஸ், பிரம் படி லேன், கொக்குவில். (3202)


## இத்தாலி (ITALY

இத்தாலியில் இந்த வருடம் (1990) உலக கிண்ணத் திற்கான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற இருப்பது யாவரும் அறிந்ததே. நீங்களும் நேரில் (இத்தாலியில்) கண்டு களிக்க விரும்பினால் எம்மை சந்தித்து முழு விபரங்களையும் அறிந்து கொள்ளுங்கள்.

சந்திக்கும் நேரம்:-

பி. ப 1 மணி முதல் 5 மணி வரை

20-04-90க்கு முன்பாக உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

**ARAVIEENTHARAJA**
Tel: 71-2112

யாழ். பிரதிநிதி:-
பிரகாஷ்
Old No: 168, New No: 336, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(இன்னும் சொற்ப பதிவுகளே இருக்கின்றன.)
(12176)


# யாழ். இந்து - சென். ஜோன்ஸ் கிரிக்கட் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

இவ்வருடத்தைய யாழ் பாடசாலைகள் கிரிக்கெட் அணிகளில் பலம்மிக்கவை எனக்கருதப்படும் யாழ்ப்பா ணம் இந்துக்கல்லூரி அணிக் கும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான போட்டி 16,17ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரி மைதா னத்தில் நடைபெறவிருக்கி றது.

இதுவரை நடைபெற்ற போட்டிகள் எதிலும், தோல் வியடையாத இவ்விரு அணி களும் பல வெற்றிகளை அடைந்துள்ளன. சிறந்த துடுப்பாட்ட வீரர்களையும், பந்துவீச்சாளர்களையும் கொண்ட இவ்அணிகள் மோதவிருக்கும் இப்போட்டி பெருமளவில் கிரிக்கெட் ரசி கர்களை கவரும் என்பதால் பெருந்திரளான ரசிகர்கள் இப்போட்டியை காண கூட விருக்கின்றனர்.

16ஆம் திகதி பிற்பகல் 2மணிக் கும்17ஆம் திகதிகாலை9மணிக் கும் ஆரம்பமாகவிருக்கும் இப் போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ் இந்துக்கல்லூரியின் உப அதிபர்களில் ஒருவரும் விளை யாட்டுப் பொறுப்பாசிரியரு மான திரு. என். சோமசுந் தரம் செய்து வருகிறார். (இ - மு)

## திருமலையில் நெருப்புக் காய்ச்சல்

திருகோணமலை, ஏப் 9

திருகோணமலையில் நெருப் புக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகிறது. கடந்த 6 மாத காலத்தில் 326 பேர் நெருப்புக் காய்ச்சல் காரணமாக ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப் பட் டனர்,

தற்போது நிலவும் அதிக வெப்பமே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது

## புனரமைப்பு கூட்டம்

கிளிநொச்சி, ஏப் 9

கனகபுரம் ஸ்காந்தா சன சமூக நிலைய புனரமைப்புக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

திரு. ஆ. பி. இராசநாய கம் தலைமையில் நடைபெற விருக்கும் இக்கூட்டத்தில் கிளிநொச்சி உதவி அரச அதிபர் திரு. சு. வேலுப் பிள்ளை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மு. குமாரதாசன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ஒ)

# சிங்கள மக்களுக்கு கடைசிச் சந்தர்ப்பம்

## அன்ரன் பாலசிங்கம் கூறுகிறார்

தாளையடி, ஏப். 9

'சிங்கள மக்கள் தற்போ தைய சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்க ளுக்கு இறுதிச் சந்தர்ப்பத்தை அளித்துள்ளோம்.'

'இன்றைய அரசியல் நிலை' பற்றிய விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கூட் டம் ஒன்றில் விடுதலைப்புலி களின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்,

இக் கூட்டம் வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை யில் நடைபெற்றது.

கூட்டத்தில் திரு. அன்ரன் பாலசிங்கம் தொடர்ந்து பேசியதாவது:-

'ஆயுத ஒப்படைப்பு என்ற பேச்சுக்கே இப்போது இட மில்லை தமிழ் மக்களின் பாதுகாப்பும், உரிமைகளும் முதலில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சிங்கள அர சாங்கங்களோடு பேச்சு வார்த்தைகளை நடத்தி தோல்விகண்டிருந்தார்கள்.

ஆனால் இன்று நாம் பலம் பொருந்திய ஓர் அமைப்பாக இருந்துகொண்டே அரசாங் கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துகின்றோம்.

எம்மால் அளிக்கப்பட்டுள்ள இறுதிச் சந்தர்ப்பத்தை சிங் கள மக்கள் சரியான முறை யில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

கூட்டத்தில் திருமதி அன் ரன் பாலசிங்கம் தமிழீழ விடு தலைப் புலிகளின் இராணு வப் பொறுப்பாளர் திரு. சூசை, விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் வடம ராட்சி அரசியல் பொறுப்பா ளர் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் திரு. விக்னா நன்றி |தெரிவித்து உரையாற்றினார். (இ144)

## வாசகர் வட்ட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஏப் 9

நாவற்குழியிலுள்ள சாவகச் சேரி பிரதேச சபை உபபணி மனை நூலகத்தில் எதிர் வரும் 15 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வாசகர் வட்டம் அமைப்பதற் கான பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. (ஒ)

## யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
## பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 15 - 04 - 90 ஞாயிற்றுக்கிழமை காலை 8 00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் ஆரம்பமாகி மாலை 4.00 மணி வரை வழமையான நிகழ்ச்சிகளு டன் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் இதிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

க. நாகராசா (அதிபர்)
தலைவர்

மா. இராமதாஸ்
பா. இராசசேகரன்
இணைச் செயலர்

[12300]


## The Jaffna Education Centre
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)

1. G.G.E. (O/L) — Day and Evening Classes
2. G.C.E. (A/L) — Science, Arts and Commerce 90, 91, 92
3. Shorthand Typing இரு மொழிகள் மூலமும்
4. Spoken English
5. I. A. B.
6. A. A. T.
7. G. A. Q. ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

புதிய பிரிவுகள் 10-04-1990ல் ஆரம்பமாகின்றன

"பெண்களுக்கு விடுதி" வசதியும் அளிக்கப்படும்.

(3160)


# 31ம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டிக் கிரியையும்



**திரு. ஆறுமுகம் தம்பிராஜா**

மண்ணகம்: 18 - 12 - 1917
விண்ணகம்: 10 - 03 - 1990

குடும்பத்தலைவனாக இதுவரை இருந்து, கடந்த 31 நாட்களுக்கு முன் எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்த உங்கள் ஆன்மா சாந்தியடைய என்றும் இறைவனை பிரார்த்திக் கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

சந்தையடி கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.
[12297]

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நாகபூஷணிதேவி மாணிக்கராசா**

மண்ணுக்கு: 07 — 10 — 1957

விண்ணுக்கு: 17 — 03 — 1984

திதி: 09 - 04 - 1990

அன்பின் உருவமாய், பண்பின் சின்னமாய், எங்கள் அனைவருக்கும் திகழ்ந்த தேவியே மீளாத் துயிலால் எம் அனை வரையும் மாளாத் துய ரில் வாடவைத்து விட்டு இறைவனடி சேர்ந்து ஆறு ஆண்டு ஆனாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களிலிருந்து என் றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புக் கணவர்,
பெற்றோர், உறவினர்கள்.

40/1, இராமனாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
[12259]

# நீங்காத நினைவு ஆராதனையில் ஓராண்டு



**முத்துசிவஞானம் ரமேஸ்வரன்**

உடல் எடுத்தது: 09 - 10 - 1971
உடல் விடுத்தது: 22 - 03 - 1989

திதி: 09 — 04 — 1990 (பங்குனிப் பௌர்ணமி)

பாராள்வாய் என்ற எதிர் பார்ப்பு
எமக்கோ இல்லை;
தாராள மனத்தினனாய் தரணிக்கே பயன்படுவை
வீரா நீ என்றிருந்தோம் விதிவேறாய் ஆச்சே
திராத துயரெம்மைத் தீய்த்திடவே நீ மாய்ந்து
ஒரு வருடம் என்று யுகம் ஒன்று கழிந்ததுவோ!
திருமகனே! உனையிழந்து
திசைப்பூண்டில் மிதித்தவராய்
திரு விழந்தோம்; திசைதெரியாத் திரைகடலின்
அலை நடுவே ஒருபடகாய் உலைகின்றோம்;
ஒளிகாட்டும் விளக்கிழந்தோம்
வேரோடும் பறித்தெறிந்து விழுதிழந்த மரமானோம்
யாரோடு நோவது யாம்? யாவுமெமக் கிருள் பரவ
நீரோடுங் கண்களிலே நிற்பதெல்லாம் நின் உருவே!
சீரோடு அறிவமைந்து சிந்தை சிறந்தவனாய்
நீ வளர்ந்து உலகினுக்கு நிறை பணிகள்
செய்வையென ஆவலுடன் காத்திருந்தோம்
அடுத்தவர்க்குத் தீங்கெண்ணாத்
தேவ மகனே! நீ... தேவனாய் ஆகிவிட்டாய்!
பாவம் பழியறியாய்! பரகதிக்கே ஏகி விட்டாய்.

குடும்பத்தினரும்,
நண்பர்களும்.

'ரமேஷ கம்'
அச்சுவேலி.
[3153]

# மூன்றாம்மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



**அமரர் வல்லியப்பர் ஆறுமுகம்**

மண்ணில்: 09 - 08 - 1929
விண்ணில்: 09 - 01 - 1990

அந்தியேட்டி 09 — 04 — 1990

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் விளங்கி எங்களை பாசத்துடன் பாதுகாத்து வந்த எங்கள் குல விளக்கு திடீரென அணைந்ததைக் கேள் வியுற்று வந்து மரணச் சடங்கில் கலந்து கொண் டோருக்கும், எங்கள் ஆறாத்துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் உற்றார், உறவினர் அயல வர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப் பதுடன் 09 - 04 - 1990 திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அனுதினமும் இறைவனைப் பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

காந்தியூர், மாலாவத்தை,
புலோலி.
[3141]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல

**பொருள்:**
கண்களோடு கண்கள் நோக்கால் ஒத்திருந்து அன்பு செய்யுமானால் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல்லாமற் போகின்றன.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.　தொலைபேசி: 2288
09 - 04 - 1990　த. பெ இலக்கம் 25


# கல்லெறிதலை தடுக்குக

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் வைத்தே ரயில்களுக்குக் கல்வீசப்படுவதாகச் செய்தி வந்துள்ளது. யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபடும் ரயில்கள் மீது, கடந்த சில நாட்களில், பல தடவைகள் கல்வீசப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கல்வீச்சுக்கு இலக்காகி ரயில்வே அதிகாரி ஒருவர் காயம் அடைந்திருக்கிறார் என்றால் நிலைமை மோசமாகி வருகிறது என்பது அர்த்தம்.

இனக்குழப்பம் வருவதற்கு சற்று முந்திய காலத்திலும், அது வந்த பின்னரும் சிங்களப் பிரதேசங்களில் வைத்து தமிழர்கள் பயணம் செய்த ரயில்கள் மீது கல் எறியப்பட்டது நாளாந்தச் செய்திகளாக இருந்தன. ரயில்கள் மட்டுமன்றி, யாழ்—கொழும்பு பாதைகளில் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்கள் மீதும் கல் வீசப்பட்டன. முதலில் கல்வீச்சாக ஆரம்பித்த வெறித்தனம், இனத்துவேஷம், பின்னர் நடுவழிப் பாதைக் கொள்ளைகள், கொலைகள், தீ வைப்புகளாகப் பூதாகாரமாகியதும் சரித்திரமாகிவிட்டன.

பாதுகாப்பற்ற நிலையில் பயப்பீதியுடன் தமிழர்கள் கொழும்புக்குப் பயணம் செய்யவேண்டிய ஆபத்தான நிலை வளர்ந்ததால் சில சந்தர்ப்பங்களில் யாழ் கொழும்புப் போக்குவரத்தே முற்றாகத் தடைப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் பயணிகளும், சேவைகளும் குறைந்து அவ்வழிப் போக்குவரத்து மெலிந்து போனதும் உண்டு. உயிர் உடைமைப் பாதுகாப்பின்மையின் மத்தியிலும் பஸ் போக்குவரத்து விட்டுவிட்டேனும் நடைபெற்று வந்தது. ரயில் சேவை முற்றாக ஸ்தம்பித்தது.

கால ஓட்டத்தில், பல கஷ்டங்கள், இன்னல்கள், இழப்புகள், அழிவுகளின் பின்னர் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் சீர்திருந்தி இருக்கின்றன. வழமையான வாழ்க்கை நிலையை மக்கள் மீண்டும் கண்டிருக்கிறார்கள்.

அதன் பெறுபேறாக ரயில் சேவை உட்பட சகல போக்குவரத்துச் சேவைகளும் சுமுக நிலைக்கு வந்து சீராகவும், சிறப்பாகவும் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. இதனைப் பார்க்கப் பொறுக்காத தீய சக்திகள், பேரினவாதிகளின் கைக்கூலிகள், தமிழ்ப் பயணிகளுக்கு, ரயில் பயணிகளுக்கு, பஸ் பயணிகளுக்கு முன்னரைப்போல நடுவழித் தொல்லை கொடுக்கக் கூடும் என அஞ்சப்பட்டது உண்டு.

அந்த அச்சத்தை நிரூபிக்கும் விதத்தில், ஓரிரண்டு சம்பவங்களை யாழ்—கொழும்பு பஸ் பயணிகள் அண்மையில் எதிர் நோக்கவேண்டியிருந்ததும் உண்டு. ஆனால் ரயில் சேவை, குறிப்பிட்டுக் கூறக்கூடிய அசம்பாவிதம் எதுவும் (வவுனியாவுக்கு அப்பால்) இல்லாமல் நடைபெற்று வருவது அதிர்ஷ்ட வசமானது. திருஷ்டி கழிக்க வேண்டியது என்றிருக்கையில்—

ரயில் பயணத்தைப் பாதுகாப்பற்றது ஆக்கும், நாச வேலையில் தமிழ்ப் பிரதேசத்திலேயே விஷமிகள் சிலர் ஈடுபட்டிருப்பது கண்டிக்கப்பட வேண்டியது; தண்டிக்கப்படவேண்டியது. குடாநாட்டிற்குள் வைத்து ரயில்களுக்கு கல்வீசுவதை வெறும் "முஸ்பாத்தி" யாக "லேசாக" எடுத்துவிடல் ஆகாது. எழுந்தமானத்தில் செய்யப்படும் சிறிய விஷமத்தனம் என்று கருதுவது கூடத் தப்பு இது இப்போதைய வழமை நிலையைக்குழப்புவதற்கு எடுக்கப்படும் பெரும் சதியும், திட்டமிட்ட நாசவேலையும் என்றே கொள்ளப்பட வேண்டும்,

மக்கள் அமைதியுடன், நிம்மதியுடன், மனப்பயமில்லாமல், உயிர், உடைமைப் பாதுகாப்பு இல்லை என்ற ஆபத்தான நிலை நீங்கி வாழ்வதை விரும்பாத தீய சக்திகள் குடாநாட்டிற்குள் இருக்கின்றன என்றே கருதவேண்டும்.

வவுனியாவுக்கு அப்பால் ரயில் பயணங்களை மீண்டும் ஆபத்துக்கு உரியனவாக்குவதற்கு கல்வீச்சு ஒரு கருவாக இருக்கலாம் அல்லவா? இங்கே கல் எறிந்தால் அது அப்பால் நடப்பதற்கு அடி எடுத்துக் கொடுப்பதாக அமையக் கூடும் என்று திட்டமிட்டு, இவ்வாறு செய்யக்கூடும். வீடு கொளுத்தும் அரசனுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரிமார்களாக, ஏஜண்டுகளாக இங்கு சிலர் இயங்கக்கூடும். யார் அறிவார்? கல்வீச்சில் ஈடுபடுவோர் பேரினவாதிகளின்கையாட்களா அல்லது ரயில்சேவையைச் சீர்குலைத்து மக்களுக்கு இன்னல் கொடுத்துத் தாம் லாபம் தேட முயலும் சக்திகளின் எடுபிடிகளா அல்லது அரசியல் லாபத்துக்காக அமைதியைக் குழப்ப முனையும் வெளிச்சக்தி எதனதும் ஏஜண்டுகளா என்பது இனங்காணப்பட வேண்டும்.

அவர்கள் யாராக இருந்தாலும், சீரடைந்து வரும் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையைக் கெடுக்க எவருக்கும் இடம் கொடுக்கலாகாது. வடக்கு - கிழக்கில் மக்கள் பாதுகாப்பைப் பொறுப்பேற்றிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இது விடயத்தில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விடும் ஆபத்து உண்டு.

## 3000 ஆங்கில ஆசிரியர் நியமனம் பெறுவார்கள்

கொழும்பு, எப்ரல் 9
ஓய்வு பெற்ற மூவாயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கு மீண்டும் ஆங்கில ஆசிரிய நியமனம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

60 – 65 வயதுக்கு இடைப்பட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கே இந் நியமனம் கிடைக்கும்.

ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்த பட்டதாரி ஆசிரியருக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு 75 ரூபாவும் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு 60 ரூபாவும் சம்பளம் வழங்கப்படும்.

ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு இவர்கள் படிப்பிக்க வாய்ப்பு உண்டு.

வாரத்திற்கு 10 மணித்தியாலங்கள் அல்லது மாதம் 40 மணித்தியாலங்கள் இவர்கள் ஆங்கிலம் போதிக்க வேண்டும்.

திறைசேரி நிதி வசதியைப் பொறுத்து இவர்களின் நியமனம் இரண்டு, மூன்று ஆண்டுகள் நீடிக்கும். (இ - எ)

## கடல் கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்பு

சேமமடு, ஏப்ரல் 09
இலங்கைக் கடல் கடந்த சேவைக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான முழு விபரங்களும் 23. 3. 90 ஆம் திகதி யிடப்பட்ட வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன.

பட்டதாரிகளாகவும், 26 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்கும் விண்ணப்பதாரர்கள் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். (இ-37)

## கிளிநொச்சியில் சமாதான சபைகள்

கிளிநொச்சி, ஏப்ரல் 09
கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மூன்று சமாதான சபைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கிழக்கு பிராந்தியத்தில் ஒரு சமாதான சபையும், மேற்கு பிராந்தியத்தில் இரண்டு சமாதான சபைகளும் அமைக்கப்பட்டுள்ளன. (-76)

அமெரிக்கா, பிரான்ஸில் உள்ள நிறுவனங்கள்

# தமிழ்ப் பகுதிகளுக்கு உதவுவதற்கு தயங்கிய நிலை நீங்கவுள்ளது

## தூதரக அதிகாரிகள் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 9
கடந்தகால அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவைப்படும் உதவிகளை வழங்குவதற்கு பிரான்சிலும், அமெரிக்காவிலும் உள்ள நிறுவனங்கள் தயாராகவிருக்கின்றன.

இங்கு நிலைமை சரியில்லை என்று காரணங்காட்டி உதவிகளை வழங்குதற்கு அந்தநிறுவனங்கள் தயக்கம் காட்டி வந்த நிலை எமது நேரடிவிஜயம்மூலம் நீங்கவுள்ளது.

இங்குள்ள அமைதியான நிலையை எமதுநாட்டுத் தூதரகங்கள் மூலம் அந்த நிறுவனங்களுக்குத் தெரிவிப்போம்.

யாழ்ப்பாணத்துக்கு இரண்டுநாள் விஜயமொன்றை மேற்கொண்ட பின்னர் கொழும்பிலுள்ள அமெரிக்க பிரெஞ்சு தூதரக உயர் அதிகாரிகள் உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தனர்.

அமெரிக்கத் தூதுவராக அதிகாரி திரு. டி. ஏ. ஹரி பிரெஞ்சுத் தூதுவராக அதிகாரி திரு. டீ. ஹேரால் பீம் ஆகியோர் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்தனர். கொழும்பு திரும்புமுன்னர் அவர்கள் உதயன் செய்தியாளருக்குப் பேட்டி அளித்தனர்.

அப்போது அவர்கள் இருவரும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

முன்னர் பல தடவைகள் நாம் யாழ்ப்பாணத்துக்கு வர முயற்சி செய்தோம். இங்குள்ள நிலைமை சரியில்லை என்று காரணங் காட்டப்பட்டது.

இங்கு நேரில்வந்து பார்த்ததில் வைத்தியசாலைகள் இயங்குகின்றன. கடைகள் திறக்கப்படுகின்றன. மக்கள் தம் வழமையான வேலைகளைச் சகஜமாக மேற்கொள்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

### மக்களுடன் இணைந்துள்ள விடுதலைப் புலிகள்

நகரப் பகுதியைவிட நகருக்கு வெளியே விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் சைக்கிள்களில் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளார்கள்.

விடுதலைப்புலிகள் ஒழுக்கமுடையவர்களாகவும் பொறுப்புள்ளவர்களாகவும் செயற்படுவதை அவதானிக்க முடிந்தது.

நாம் பல இடங்களையும் சுற்றிப்பார்த்ததில் சமாதானம் வந்துள்ள சூழ்நிலை தான் தெரிகிறது.

ஜனாதிபதியும் விடுதலைப் புலிகளும் மனம் திறந்து பேசுகிறார்கள்.

தமிழ்ப்பகுதிகள் இன்று எப்படி உள்ளன? மக்கள் எந்நிலையில் உள்ளனர்? சந்தோஷமாக வாழ்கிறார்களா? என்ற கேள்விகளை எமது தூதர்களிடம் எமது நாட்டு மக்கள் கேட்கிறார்கள்.

நேரில் இங்கு வந்து பார்த்த போதுதான் நிலைமை சுமுகமானதைப் பத்திரிகைகளில் படித்ததைவிட மேலும் விரைவாக அறிய முடிந்தது.

நாம் திருமலை உட்பட ஏனைய தமிழ்ப்பகுதிகளுக்கும் செல்வோம்.

மக்கள் தாம் விரும்பிய அமைதிநிலை ஏற்பட்டுவிட்டது என்று சந்தோஷம் அடைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது.

நாம் கொழும்பு சென்றதும் முதல் வேலையாக இங்குள்ள சமாதான சூழ்நிலைபற்றி எமது நாடுகளின் தமிழர்களுக்கு உதவத் துடித்துக்கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கு தூதுவர்கள் மூலம் தெரிவிப்போம்.

இந்த கட்டடங்கள் பெருமளவில் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டியுள்ள நிலையை அவர்களுக்குத் தெரிவிப்போம்.

நாம் சமர்ப்பிக்க இருக்கும் அறிக்கையை அடுத்து பல நிறுவனங்களின் அதிகாரிகள் உல்லாசப் பயணிகள் இங்கு வருவார்கள் என நம்புகிறோம் — இவ்வாறு அந்த உயர் அதிகாரிகள் இருவரும் தெரிவித்தனர். (அ-3)

இளிநொச்சியில்

## குழாய் நீர் விநியோகம் 12 ஆம் திகதி ஆரம்பம்

கிளிநொச்சி ஏப் 9
கிளிநொச்சியில் குழாய் நீர் விநியோகம் 12 ஆம் திகதி ஆரம்பமாகிறது

12 வருடங்களுக்கு முன் 2 கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் தற்போது தான் பூர்த்தியாக்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 1 லட்சத்து 50 ஆயிரம் கலன் தண்ணீர் கொள்ளக் கூடிய நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

24 மணி நேரமும் தண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடந்த மாதம் 31 ஆம் திகதி அமைச்சர் வின்சென்ட் பெரேராவால் ஆரம்பித்து வைக்கப்பட இருந்த இந்த திட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப் பட்டிருந்தது.

தற்போது வைபவம் எதுவும் இல்லாமல் சாதாரண முறையில் நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்படும்என கிளிநொச்சி நீர் விநியோகத் திட்ட அலுவலக தொழில்நுட்ப உதவியாளர் திரு. எஸ். ரவீந்திரா உதயனுக்குத் தெரிவித்தார். (இ-76)

## அன்னை பூபதி நினைவாக திருமலையில் நிகழ்ச்சிகள்

திருகோணமலை ஏப் 9
உண்ணாநோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த அன்னை பூபதியின் நினைவாக திருகோணமலை நகரிலுள்ள பல வீதிகள் வாழை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

அன்னை பூபதியின் உருவப் படம் ஆங்காங்கு வைக்கப்பட்டு பிரார்த்தனை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

மடத்தடிச்சந்தியில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டு இரவு பகலாக தீபம் ஏற்றப்பட்டு வருகின்றது.

இதே போன்று ஒவ்வொரு சந்திகளிலும் அவரின் உருவப் படம் வைக்கப்பட்டு தீபம் ஏற்றப்பட்டு வருகின்றது.

இதேவேளை எதிர் வரும் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை சிவன் கோவில் வீதியில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கும் திருகோணமலை அன்னையர் முன்னணி ஒழுங்குகளைச் செய்துள்ளது.

கிராமப் புறங்களிலும் இவ்வாறு உண்ணாவிரத நிகழ்ச்சிகள் தினமும் இடம் பெற்று வருகின்றன. (இ-150)

## சமயபாட ஆசிரிய ஆலோசகராக மேலும் 300 பேர் நியமனம்

கொழும்பு, ஏபரல் 9
சமய கல்வி போதனையை ஒழுங்கமைப்பதற்காக சமய பாட ஆசிரிய ஆலோசகர்களாக மேலும் 300 பேர் புதிதாக நியமனம் செய்யப்பட இருக்கின்றனர்.

கல்விச் சேவை ஆணைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

பதவியுயர்வுகள், புதிய நியமனங்கள் ஆகியவற்றை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முடிவு ரத்துச் செய்யப்பட்டதும் இந்நியமனங்கள் செய்யப்படும் என்றும் அவர் சொன்னார்.

புதிய நியமனங்கள் இடம் பெற்றதும் 30 பாடசாலைகளுக்கு ஓர் ஆசிரிய ஆலோசகர் என்ற அடிப்படையில் புதியவர்களுக்குரிய கல்வி வட்டாரங்கள் தீர்மானிக்கப்படும்.

புதிதாக நியமனம் பெறுவோரில் 55 பேர் இந்து சமயத்துக்கும், 35 பேர் இஸ்லாம் சமயத்துக்கும், எஞ்சியோர் பௌத்த, கிறிஸ்தவ சமயங்களுக்கும் நியமிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நீர்வேலி பொதுச்சந்தை

அண்மைக்கால அசம்பாவிதங்களின்போது சேதமடைந்த நீர்வேலி பொதுச் சந்தை இன்னமும் திருத்தப்படாது இருக்கின்றது. (க-72)

## மாகாண சபை செயலகத்துக்கு விஜயம்

சேமமடு ஏப்ரல் 9
இம்மாத நடுப்பகுதியில் அல்லது கடைசிப்பகுதியில் அரசகரும மொழிகள் திணைக்களத் தலைவர், செயலகங்களுக்கும், மாகாண சபைகளின் அலுவலகங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

தமிழ் மொழியும் அரசகரும மொழி ஆக்கப்பட்டிருப்பதால் அதனை அமுல் செய்வதில் இருந்துவரும் சிக்கல் குறித்து நேரடியாக ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கம் ஆகும். (இ-37)

## துர்க்கை அம்மன் பொங்கல் விழா

ஒட்டுசுட்டான், ஏப் 9
புதுக்குடியிருப்பு துர்க்கை அம்மன் கோவில் பொங்கல் விழா நாளை 10 ஆம் திகதி செவ்வாயன்று நடைபெறும். (க-113)

யாழ். மருத்துவ பீடத்தில் போதனா வைத்தியசாலை:

## ஜனாதிபதியைச் சந்திக்க முயற்சி

யாழ்ப்பாணம் ஏப் 9
யாழ்-பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் போதனா வைத்தியசாலை அமைப்பது சம்பந்தமாக ஜனாதிபதியை சந்திக்க திகதி ஒன்றை தரும்படி கோரப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக மருத்துவபீட அதிகாரி ஜனாதிபதிக்கு நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மருத்துவ மாணவர்களுக்கு உள்ள ஒரே வைத்திய பீடமான இந்த வைத்தியபீடத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தம் வெளிக்கள பயிற்சி பெற யாழ் - போதனா வைத்தியசாலைக்கேசெல்லவேண்டியுள்ளது. இங்கு போதிய வசதிகள் இல்லை. இதனால் அவர்கள் அரைகுறை பயிற்சியையே பெறவேண்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் உதவியுடன் இந்த மருத்துவபீடத்துடன் போதனா வைத்தியசாலையை அமைக்க சம்மதம் அளித்திருந்தார்.

இதற்கான திட்டங்கள் யாவும் ஆக்கப்பட்டு அனுப்பப்பட்டும், அமைச்சுக்களின் இழுபறி நிலையால் இன்னும் வைத்தியசாலை அமையவில்லை. பல்கலைக்கழகமானியக்குழு, கொள்கை திட்டமிடல் அமைச்சு ஆகியன அங்கீகாரம் அளித்தும், சுகாதார அமைச்சு தடையாக இருந்து வருகின்றது.

இந்த விடயம் குறித்து பேச்சு நடத்த எமக்கு ஒரு சந்தர்ப்பம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நாணய மாற்று விகிதம்

05-4-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.52 | 232 48 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997 20 | 4002 75 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6558 46 | 6582 22 |
| 100 | [illegible] | 2344 18 | 2360 47 |
| 100 | பிரெஞ்சு பிராங் | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பானிய யென் | 25.2320 | 25.4247 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

### நேர்முகப் பரீட்சை எப்பொழுது?

வட-கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களத்தால் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையிலுள்ள அதிசிறப்பு வகுப்பிற்கு சிறப்புத் திறமைப் பதவி உயர்வுகளுக்கான விண்ணப்பங்கள் சென்ற ஆண்டு கோரப்பட்டன. ஆனால் இன்றுவரை அதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்படவில்லை.

இந்த நேர்முகப் பரீட்சையை மிக விரைவில் நடத்துமாறு பணிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அத்தோடு புதிதாக அமைக்கப்படும் மாகாண பகிரங்க சேவையின் கீழ் எமது சேவை நலன்கள் பாதிக்கப்படக்கூடுமாகையால் மேலும் காலம் தாழ்த்தாது பதவி உயர்வுகளை வழங்குவது எமது சேவைக்கு நன்மை பயக்கத் தக்கதாகும்.

சேவையிலிருந்து இளைப்பாற முன்பாவது எமக்கு பதவி உயர்வு கிடைக்காதா?

உள்ளூராட்சிசேவை எழுதுவினைஞர்கள்

### ரயிலேறும் நாய்க்குட்டிகள்

கொக்குவில் ஸ்ரேசனுக்கும் கோண்டாவில் ஸ்ரேசனுக்கும் இடைப்பட்ட கேற்றுக்களில் சிலர் நாய்க்குட்டிகளைக் கொண்டுவந்து விடுகிறார்கள். அவற்றைச் சிலர் 'பார்சல்' செய்து மெயில் ரயிலில் அனுப்புகிறார்கள்,

இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுப்பார்களா?

ம. அருள்க்குமரன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு "சபாஷ்"

அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று இருந்தேன். டாக்டர்கள், உதவி டாக்டர்கள், தாதிமார்கள், மருந்துகலவையாளர்கள் அனைவருமே நோயாளிகளை மிகவும் அன்புடன் கவனித்தனர். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. குறிப்பாக சிற்றூழியர்கள் பொறுமையுடனும் ஆர்வத்துடனும் நோயாளிகளை அரவணைத்துப்பார்த்தனர்.

வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு ஒரு சபாஷ் போடவேண்டும். அவர்களுடைய தன்னலமற்ற சேவை தொடரட்டும்.

நா. சுகுமார்,
யாழ்ப்பாணம்.

## உணர்ச்சி ஊட்டும் உபதேசங்கள்

அண்ணல் நபி [ஸல்] அவர்கள், ஹஜ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அருளிய அரிய உபதேசங்கள்.




★ அனாதைகளுக்கு அநீதம் செய்யாதீர்.
★ உமது உணர்வைப்பற்றி கவலை கொள்ளாதீர்.
★ யாசிப்போரை விரட்டாதீர்.
★ விருந்தினரை உள்ளன்புடன் உபசரிப்பீராக.
★ கஷ்டம் வந்தபின் பொறுமைகொள்வீராக
★ நன்மைகளை ஏவித் தீமைகளைத் தடுப்பீராக.
★ உமது குற்றம்- குறைகளை நினைத்து வருந்துவீராக.
★ உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவீராக.
★ அதிகமாக நித்திரை செய்யாதீர். அதனால் இதயம் மரித்து விடுவதோடு கை சேதமும் உண்டாகும்.
★ அனுதினமும் நூறுமுறை பாவ மன்னிப்பு தேடிக் கொள்வீராக.
★ இருளான இடத்தில் உட்கார்ந்து உணவு உட்கொள்ளாதீர்.
★ ஆகாரத்தை வாய் நிறைய வைத்து உண்ணாதீர்.
★ உமது நேயர்களை வெறுக்கவும், அவர்களைப் பற்றி கோள் சொல்லவும் செய்யாதீர்.
★ எதையும் பேசும் போது பிறர் புரியும்படி விளக்கி பேசுவீராக.
★ விலக்கானவற்றை நோக்காதிருப்பீராக.
★ உமது அறிவையே நம்பி எதையும் செய்யாமல் உம்மைக் காட்டிலும் சிறந்தோரிடம் ஆலோசனை [மஸீரா] பெற்றுச் செய்வீராக.

# 5 குழந்தைகளை ஒன்றாகக் கட்டி ஆற்றில் தள்ளிய தாயார்!

நைரோபி ஏப் 8

தாயார் ஒருவர் தான் பெற்ற ஐந்து குழந்தைகளை ஒன்றாக கட்டி ஆற்றிலே தள்ளிக் கொலை செய்த சம்பவம் கென்யாவில் இடம் பெற்றது.

பத்து, எட்டு, ஆறு, நான்கு, மற்றும் 10 மாதங்கள் நிரம்பிய இக்குழந்தைகளின் சடலங்கள் ஆற்றில் கட்டப்பட்ட நிலையில் மிதப்பதை வழிப்போக்கர் ஒருவர் கண்டு பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

கொலை செய்த தாயாரைத் தேடும் பணியில் பொலீஸார் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

# சோவியத் 'ஹெலி'கள் வட்டமிட லித்து ஏனியாவில் சுதந்திரப்பேரணி

வில்நியஸ், ஏப் 8

லித்து ஏனிய தலை நகரில் சுதந்திர பிரகடனத்தை ஆதரித்து சுமார் மூன்று லட்சம் மக்கள்நேற்றுபேரணி ஒன்றை நடத்தினர்.

சோவியத் யூனியனில் பிரிந்து சுதந்திர நாடு அமைக்கும் பிரகடனத்தை லித்து ஏனிய நாடாளுமன்றம் அண்மையில் வெளியிட்டது தெரிந்ததே.

அதன்பின்னர்லித்துஏனியாவில் இடம் பெற்ற முதலாவது சுதந்திரப் பேரணி இதுவாகும்.

பேரணியைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் லித்து ஏனிய அதிபர் திரு. போர்கிஸ் பேசுகையில், சுதந்திரநாடு அமைக்கும் விஷயத்தில பின்வாங்கும் விஷயத்திற்கே இடமில்லை — என்று சொன்னார்.

கூட்டம் நடந்து கொண்டிருந்த சமயம், சோவியத் இராணுவ ஹெலிகொப்டர்கள் மேலே வட்டமிட்டன.

அவற்றில் இருந்து மாஸ்கோ அரசு வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் வீசப்பட்டன.

சுதந்திரப் பிரகடனத்தைக் கைவிட்டு சோவியத் யூனியனுடன் இருக்கும் படி மக்களுக்கு இத் துண்டுப்பிரசுரத்தில் மத்திய அரசு வேண்டுகோள் விடுத்தது.

ஹெலிக்கொப்டர்கள் கூட்டம் நடைபெற்ற இடத்தின் மீது வட்டமிட்டது. துண்டுப் பிரசுரங்கள் வீசியது மக்களை ஆத்திரப்படுத்துவதாக அமைந்தது என்று லித்து ஏனியா அறிவித்தது. (எ)

## 4 வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மு.சி. கனகரத்தினம்

திதி: 09 - 04 - 1990

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

13/3. நாயன்மார் வீதி,
நல்லூர். (12170)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வர்ணகுலசிங்கம் கலைஞானசிங்கம்

மண்ணில்: 17 - 04 - 1956
விண்ணில்: 10 - 04 - 1989

திதி: 09 — 04 — 1990

அன்புடனும் பண்புடனும் பழகி எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்ற உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

அன்பு மனைவி தியாகேஸ்வரி,
மாமி மச்சான், மச்சாள்மார்,
சகோதரன் வ. இராம்.

156. கோவில் வீதி.
நல்லூர். [12282]

## சீன அரசின் முன்னேற்பாடு

பீக்கிங், ஏப்ரல் 08

கடந்த வருடம் போன்று அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பீக்கிங் நகர தியன் மென் சதுக்கத்தில் நடைபெறுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை சீன அரசுஎடுத்துள்ளது.

தியன்மென் சதுக்கத்துக்குள் பொது மக்கள் நுழைய முடியாதபடி தடை உத்தரவு ஒன்றை பீக்கிங் நிர்வாகம் விதித்துள்ளது (எ)

## இந்தோ - ஆஸி கூட்டுறவு

கான்பெரா, ஏப்ரல் 8

இந்தோனேஷியாவுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை கூட்டு அடிப்படையில் மேற்கொள்ளப் பேவாதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இரண்டு நாடுகளும் கூட்டாக கடற்படை ஒத்திகைகளை நடத்தப் போவதாக ஆஸ்திரேலிய பாதுகாப்புப்படைத் தளபதி ஜெனரல் பீற்றர் கிரேஷியன் சொன்னார். (எ)


# மக்கள் வங்கி
# அடைவு நகைகள் வழங்கல்
## முல்லைத்தீவு, மன்னார் மாவட்டம்

**முல்லைத்தீவு கிளை**

இக்கிளைக்குரிய நகைகளின் ஒரு பகுதி சடந்த வாரம் மாங்குளம் மக்கள் வங்கியில் வைத்து வழங்கப்பட்டன. மிகுதி அடைவு நகைகள் யாவும் இம் மாதம் 10ஆம் திகதி முதல் முல்லைத்தீவு ஜெசி தியேட்டர் கட்டிடத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி பணகரும பீடத்தினூடாக வழங்கப்படும். வழங்கும் திகதி பற்றிய மேலதிக விபரங்களை முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளவும்.

**மாங்குளம் கிளை**

இக்கிளைக்குரிய நகைகள் இம் மாதம் 17ம் திகதி மட்டில் மாங்குளம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நகைகள் வந்து சேர்ந்ததும் நகைகள் மீளளிப்பு ஆரம்பமாகும்.

வழங்கும் திகதி பற்றிய மேலதிக விபரங்களுக்கு மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளருடன் இம் மாதம் 17ம் திகதிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்.

**மன்னார் கிளை**

இக்கிளையில் 26-08-83 வரை அடைவு வைத்து 21-09-89 வரை மீளப் பெறுவதற்காக பணம் கட்டியவர்களுக்குரிய நகைகள் இம்மாதம் 10ம் திகதியளவில் மன்னார் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2ம் கட்டமாக 26-08-83ன் பின்னர் அடைவு வைத்த நகைகள் மன்னாருக்கு கொண்டு வரப்படும்.

முதல் கட்ட நகைகளுக்குரியவர்கள் இம்மாதம் 10ஆம் திகதியின் பின்னர் மன்னார் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு வழங்கும் திகதி பற்றிய மேலதிக விபரங்களை அறிந்துகொள்ளவும்.

பிரதேச முகாமையாளர்

மக்கள் வங்கி
பிரதேசத்தலைமையகம்,
யாழ்ப்பாணம்.
06 - 04 - 1990 [சி 4443]



# கலை வர்த்தகக் கல்லூரி
## C, C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

**A/L 90 மீட்டல், வினா - விடை வகுப்பு**

## DAY CLASSES

பிரிவு 04

| | | | |
|---|---|---|---|
| வர்த்தகம் | 11.00 | — | 12.00 |
| கணக்கியல் | 12.00 | — | 1.00 |
| பொருளியல் | 1.00 | — | 2.00 |

**ஆரம்பம்: 09 - 04 - 1990**

திங்கள் 11.00 am

★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ வாரத்தில் ஐந்து நாட்களும் அனைத்துப் பாடங்களும் நடைபெறும்.
★ முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
★ வினா - விடை வகுப்பு இலவசமாக நடைபெறும்.
★ 1980 - 89 வரையிலான 10 வருட பரீட்சை வினாக்களுக்கான விடைகள் கற்பிக்கப்படும்.
★ பிரிவு 1, 2, 3, என்பவற்றிற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
★ பிரிவு 4இற்கு குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். 15 - 04 - 90 திகதிக்குப் பின்னர் பகல் நேர வகுப்புகளுக்கு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது
★ பிரிவு 4 இற்குப் பின்னர் புதிய பிரிவுகள் எதுவும் ஆரம்பிக்கப்படமாட்டாது.

[சி-4239]



குமுலுஸ் D.F. போட்டி


# BASF
# குமுலுஸ் D.F.

பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







வெட்டி அனுப்பவேண்டிய பகுதி

பெயர் ____________________
முகவரி ____________________
____________________
வியாபாரியின் பெயர் ____________________
____________________
முகவரி ____________________
____________________

Licence No S/731

FINCHEM AGRO DIVISION
பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.



# T.V TRAVELS & TOURS

## SAUDI ARABIA

| | | | |
|---|---|---|---|
| 1. | Drivers | 600 | S. R. |
| 2. | Cleaners | 400 | S. R. |
| 3. | Cleaners [ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் மட்டும்] | 500 | S. R. |
| 4. | Mason | 550 | S. R. |
| 5. | Carpenter | 550 | S. R. |
| 6. | Welder | 550 | S. R. |
| 7. | Painter | 550 | S. R. |
| 8. | Electrician | 600 | S. R. |
| 9. | Plumber | 600 | S. R |
| 10. | Civil Engineer | 1200 | S. R. |
| 11. | Electrical Engineer | 1800 | S. R. |

மேற்காணும் வெற்றிடங்களுக்கு உடன் ஆட்கள் தேவைப்படுவதாலும் நேர்கப்பரீட்சை இம்மாத முடிவில் நடைபெறவிருப்பதாலும் எமது காரியாலயத்துடன்அனுபவச் சான்றிதழுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

வயது 21 - 49 வரை

(FRONT OF RAILWAY STATION)

Brown Road,
Kokuvil.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆமை இறைச்சி விற்போருக்கு எச்சரிக்கை

யாழ்நகர்ப்பகுதியில் ஆமை இறைச்சி விற்பனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் எச்சரித்துள்ளார்.

ஆமை இறைச்சி விற்பனை செய்யக்கூடாது என அறிவித்தும் தொடர்ந்தும் பல இடங்களில் விற்பனை செய்யப்படுவது ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டது.

அதனைத்தொடர்ந்து இனி மேல் ஆமை இறைச்சி விற்பவர்கள் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றுஅவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-3)


அன்பே சிவம்

## திருமண அழைப்பு

பேரன்புடைய பெருந்தகையீர்!

நிகழும் சுக்கில வருடம் திருவள்ளுவராண்டு 2021, பங்குனித்திங்கள் 29 ஆம் நாள் (11-04-90) புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் 10.06 மணிவரையுமுள்ள இடபலக்கின சுப முகூர்த்த வேளையில்

எங்கள் மகன் திருநிறை செல்வன் **யோகேந்திரராஜா**

எங்கள் மகள் திருநிறை செல்வி **இராஜேஸ்வரி** (ஜெயந்தி)

ஆகிய நன்மக்கட்கு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

வை. சோமசுந்தரமும் பாரியாரும்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை.

வெ. செ. குணரத்தினமும் பாரியாரும்,
''இரத்தின வாசம்''
கும்பப்பிள்ளை,
கோப்பாய்.

அவ் வண்ணமே கோரும்:
கு. குணரஞ்சன் சகோதரர், S. J. தயாநிதி குடும்பம்.

[3158]


## ஜனாதிபதி...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி
லைப் புலிகளுடன் அரசுநடத்தும் பேச்சுக்களைப் பற்றிக் கேட்டார்.

அமைச்சர்: ஆயுதக் களைவு குறித்து விடுதலைப்புலிகளுடனான பேச்சு தொடருகிறது. தகுதியானவர்கள் பொலீஸ் சேவைக்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் சேர்க்கப்படுவர்.

திரு. சேனநாயக்கா: விடுதலைப் புலிகள்-அரசு பேச்சு விவரங்களை நாம் அறிந்துகொள்ளமுடியாதா?

அமைச்சர் விஜேரத்ன: விவரங்களை இப்போது நான் வெளியிடத்தயாராகஇல்லை. நீங்கள் பேச்சுக்களைக் குழப்ப முயல்கிறீர்கள்.

நீங்கள் எல்லாரும் சமாதானத்தைவிரும்பவில்லை, இரத்தத்தில் நீச்சலடிக்க விரும்புகிறீர்கள். யாரும் நீச்சலடிக்க இரத்தஆறு ஓடுவதை நாம் அனுமதிக்கமாட்டோம்:

தி. சேனநாயக்கா: இது துரோகம்.

## பீனிசம்...

[1ஆம் பக்கத் தொடர்சி]
கூறினார்.

டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் டாக்டர் றோமகேஸ்வரன் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

யாழ்-லங்கா ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சிகள் அளிக்க கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை போதனா வைத்தியசாலை ஆக்கப்பட்டுள்ளது. அங்கு ஆயுள்வேத ஆய்வுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. முதலில் யாழ்மாவட்டத்தில் பரவிவரும் பீனிசம் நோய்க்கு மருந்து ஒன்றைத் தயாரிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப் படவிருக்கிறது- என்றார்.

யாழ்-அரச அதிபர் திரு. அன்ரன்அல்பிரட்' யாழ்-மாநகர சபை வைத்திய அதிகாரி திருமதி. சு. கதிர்காமர் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர். (அ-3)

## சுவாமிஜி...

மாக சிகிச்சை பெற அதே ஆண்டில் அவர் பம்பாய் சென்றிருந்தார்.

சுவாமிஜி யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைச் சேர்ந்தவர் ஆவார்.

அவரது பூதவுடல் நேற்று பம்பாயில் தகனம் செய்யப்பட்டது (ஒ-எ)

## பத்திரகாளி...

சந்தைப் பகுதி ஊடாக பவனியாகச் சென்று தீர்த்தச் சமுத்திரத்தை அடைந்தார்.

பெரும் எண்ணிக்கையான சிங்கள பக்தர்களும் அம்பாளுக்கு அர்ச்சனை செய்து வழிபட்டதைக் காண முடிந்தது, [ஒ]

## எழுச்சி...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உண்ணாவிரதம், மற்றும் நிகழ்ச்சிகளில் பங்களிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## மாகாண சபையின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
யிடப்படும் என அக்கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் நேற்றிரவு கொழும்பில் உதயன் செய்தியாளரிடம் தகவல் வெளியிட்டார்,

73 உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணசபை தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு கூடாத பட்சத்தில் அது சட்டப்படி தானாகக் கலைந்து விடும். இந்த நிலையைத் தவிர்ப்பதே இந்த முயற்சியின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் சபைக் கூட்டத்தை நடத்துவதுபற்றி இந்தியாவில் உள்ள ஈ; பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் கே. பத்மநாபாவிடம் எடுத்துச்சொல்லவே அவைத் தலைவர் திரு. பொன். ராம் ராஜகாரியர் இந்தியா சென்றிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

73 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையின் கூட்டத்தைநடத்த ஆகக்குறைந்த கோரமாக 25 உறுப்பினர்கள் கூட்டத்திற்குச் சமுகமளிக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த 17 பேர் சபையின் உறுப்பினர்களாக உள்ளனர்,

கொழும்பில் வடக்கு மாகாணசபைக் கூட்டம்நடத்தப்படுமானால் அதில் கலந்து கொள்ள இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள பல மாகாண அமைச்சர்கள் கொழும்புவரக் கூடுமென்று ஈ. பி. ஆர்.எல். எவ். வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது,

ஒன்றுமே இறுதியாக்கப் படவில்லை, கொழும்பில் விரைவில் மாகாண சபைக் கூட்டம் நடைபெறும் என்று மட்டுமே என்னால் கூறமுடியும்'--இப்படி கட்சியின் சிரேஷ்ட வட்டாரம் ஒன்று தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று செய்தி வெளியிட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஜனாப் சேகு இஸ்ஸதீன் இதுபற்றிச் சொன்னதாவது:

மாகாணசபை கலைக்கப்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முழு எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளது. ஆகவே முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதை எவருமே தடுக்கமுடியாது.

உறுப்பினர்களின் குறைபாடுகள்பற்றிக் கவனிக்காமல் சபையைக் கலைப்பதை அனுமதிக்கமுடியாது.

இப்படி அவர் சொன்னார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை வருமாறு:

ஈ. பி ஆர். எல். எவ், மற்றும் ஈ. என். டி, எல். எப். உறுப்பினர்கள்—55

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்—17.

ஐ. தே. க. —01.

மொத்த உறுப்பினர்கள்—73. (உ-எ)


# BOND
## INSTITUTES, JAFFNA
# O/L
DECEMBER, 1990, 91...

முறையான, பாடத்திட்டத்திற்கேற்ற விரிவுரைகள்.

இலவச கற்கைப்பொதிகள் [STUDY PACKS]

O/L பகல் வகுப்புகள் (Day Class)

சாலை, மாலை வகுப்புகள்

★ TYPING ★ SHORTHAND

★ SPOKEN ENGLISH

ஆரம்பம்: 10 - 04 - 1990

(-சி4263)



முதலாவது
## பிறந்தநாள் வாழ்த்து



## ★ விதுரா பத்மநாதன் ★

அளவெட்டி தெற்கு தம்மளையைச் சேர்ந்த பத்மநாதன் றஞ்சனா தம்பதியினரின் செல்வப் புதல்வி விதுரா பத்மநாதன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பூட்டப்பா, பெரிய பெரியப்பா குடும்பத்தினர், ஆசைப்பெரியப்பா குடும்பத்தினர், சுவிஸ் பெரியமாமா, மாமி, ஆசைமாமா, ஜேர்மனியிலுள்ள சின்னம்மா, வவுனியா பெரியமாமா குடும்பத்தினர், மாதவராசாமாமா குடும்பத்தினர், துரைமாமா குடும்பத்தினர், அமுதன்சித்தப்பா, முத்துமாமி, யோன்சன் பாட்டா குடும்பத்தினர், (F) பிறாங்கிலின் பாட்டா குடும்பத்தினர், கருணாசித்தப்பா குடும்பத்தினர், சுஜி அக்கா, பாபு அண்ணா மற்றும் உற்றார், உறவினர் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

மு.பத்மநாதன்
''ஜோய் ஹவுஸ்''
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(3148)



# VICKNA
## TUITION CENTRE
52, STANLEY ROAD, JAFFNA.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

A/L கலை வர்த்தகம்

# 91 Day Classes

(8.00 — 2.00)

ஆரம்பமாகவுள்ளது.

முக்கிய குறிப்பு:-

1. எமது வழமையான ஆசிரியர் குழு.
2. மாணவர்கள் 30-04-90 முன்னரே அனுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. முற்றிலும் பாடசாலை போன்றது.
4. தவணை பரீட்சைகள் நடாத்தப்படும்.
5. முழுப் பாடத்திட்டமும் நடாத்தி முடிக்கப்படும்.

[சி-4259]



## எமது இன்றைய புதிய வெளியீடுகள்


[1] ராஜ்மோகன் - ஜனனி - ராதாரவியின் கவிதை பாடும் அலைகள் [ஒறிஜினல்]
[2] பிரபு - நிரோசா நடித்த கலைஞரின் கவானுக்கு கெட்டிக்காரன் [ஒறிஜினல்]
[3] மோகனின் ''திரைப்படப் பாடல்கள்''

**Vol - 2**

**வீடியோ விமல்**
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(12129)


## 6 ஆம் மாத நினைவஞ்சலி



## பாலசுப்பிரமணியம் இரத்தினேஸ்வரன்
[ராசா]

தோற்றம்: 31 - 05 - 1969 மறைவு: 08 - 11 - 1989

எங்கள் இனிய உயிரே!
இரத்தினேசுவரனே! (ராசா)
மண்ணை மீட்கப் புறப்பட்டாய்
மறப்புலியுடன் ஒன்றினாய்;
ஆறாண்டு காலம் அகன்றது
அந்தோ! அந்தோ!! அந்தோ!!!
விடியல் வந்ததாய் எண்ணினோம்,

வீரமறவனே விழுப்புண் பட்டாய்!
கயவர் கடத்திச் சென்றார்
காலன் ஊர் புகுந்தாய்
கருத்தில் என்றும் இருப்பாய்
காலத்தால் அழியாது உன் புகழ்
கண்ணீர் வெள்ளத்தில்
தத்தளிக்கின்றோம்.

தாய். சகோதரர், சகோதரி, நண்பர்கள்.

ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். [12177]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் நாகநாதர் செல்லப்பா நாகரட்ணம் அவர்கள்
[ராசா மாஸ்டர்]

(இளைப்பாறிய அதிபரும் நாவற்குழி அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தாக்களில் ஒருவருமாவார்)

மலர்வு: 24-07-1926 உதிர்வு: 11-03-1990

எங்கள் அருமைத் தந்தையே! எங்களை அன்புடனும் நேர்மையுடனும் பாசத்துடனும் நல்வழி காட்டி வளர்த்து கண்ணை இமைகாப்பது போல் காத்த உங்கள் புன்னகை தவழும் இன்முகத்தை மறப்போமோ! வாழ்வில் எந்நாளும்?

அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்ச்சி 10-04-90 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறி தேற்றியவர்களுக்கும், அஞ்சலி உரை வழங்கியவர்களுக்கும் மலர்வளையங்கள் சாற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளில் அளப்பரிய உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:
அன்பு மனைவி, மக்கள் மருமக்கள்.

கணநாதம்,
சித்திவிநாயகர் வீதி,
நாவற்குழி. (சி-4445)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிக்கனமான வெண் சலவைக்கு
தேசிக்காய் வாசனையுடன்
EMDEE BAR SOAP
எம்டீ பார் சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி.


# உதயன்

09 - 04 - 1990 திங்கட்கிழமை


இன்றைய №1 நீலசோப்
EMDEE SOAP
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ நீல சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி.

சுன்னாகத்தில்

## தேசிய சேமிப்பு வங்கிக் கிளை நேற்றுத் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9 தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளை நேற்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கி உதவிப் பொது முகாமையாளர் திரு. உருத்திரா நவரட்ணராசா மங்கள விளக்கேற்றி திறந்து வைத்ததை அடுத்து சேமிப்புப் புத்தகங்களை வழங்குவது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. மகாலிங்கம் சட்டத்தரணி மா. தியாகராஜா ஆகியோருக்கு முறையே சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்புவங்கிக் கிளை பரிசோதகரும் திரு. செல்லப்பா கணேசன், இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி. உட்பட பெருமளவு மக்கள் வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ-2)

## பண்டத்தரிப்பில் தமிழ் தினவிழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 09 பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகம் இன்று 9 ஆம் திகதி காலை 8 30 மணிக்கு பண்டத்தரிப்பில் மகளிர் கல்லூரியில் தமிழ் தினவிழா நடத்துகிறது.

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு மு. சிவராஜரத்தினம் தலைமையில் விழா நடைபெறும்.

பண்டத்தரிப்புக் கோட்டம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் வைபவத்தில் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

சுழிபுரம் இளைப்பாறிய கொத்தணி அதிபர் திரு. கே. கே. நடராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மற்றும் நடனம், நாடகம், பேச்சு, கவிதை ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ)

## மின்சாரம் மூலம் பிரேத தகனம்

### விரைவில் கோம்பயன் மணலில்

யாழ்ப்பாணம் ஏப். 9 யாழ்ப்பாணத்தில் மின்சாரம் மூலம் பிரேதங்களைத் தகனம் செய்யும் முறை விரைவில் நடைமுறைக்கு வர விருக்கிறது.

யாழ். கோம்பயன் மணல் மயானத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் குறித்து நேற்று மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் மேற்படி மயான அபிவிருத்திச் சபையினருடன் பேச்சு நடாத்தினார்.

அப்போதே மின்சாரம் மூலம் சடலங்களை தகனம் செய்யும் முறையை இங்கு ஏற்படுத்துவது குறித்துப் பேச்சுக்கள் நடைபெற்றன.

அத்துடன் மயானத்துக்கு மின்சார வசதி செய்யவும், கேணியைத் துப்பரவு செய்யவும்ஏற்பாடுகள்மேற் கொள்வதென முடிவு செய்யப்பட்டது. (அ-3)

## புதுவருடத்தன்று காலை தண்ணீர் கிடைக்கும்!

### நாயன்மார்கட்டு மக்களுக்கு

யாழ்ப்பாண்ம் ஏப் 9 பலகாலமாக தடைப்பட்டிருந்த நாயன்மார்கட்டு குடிதண்ணீர் விநியோகம் புதுவருடத்தினத்தன்று ஆரம்பிக்கப்பட்விருக்கிறது.

''யுனிசெப்'' நிறுவனத்தால் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வந்த பிரஸ்தாப குடி தண்ணீர்த் திட்டம் பூர்த்தி செய்யப்படாமல்தடைப்பட்டு வந்தது.

தற் சமயம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, எதிர்வரும் புத்தாண்டுதினத்தன்று காலையில், மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கத்தால் சம்பிரதாய பூர்வமாக தொடக்கி வைக்கப் பட உள்ளது. (அ-3)

வடக்கு - கிழக்கு பொலிஸ்:

## அடுத்த வார இறுதியில் நேர்முகப் பரீட்சை

கொழும்பு ஏப் 9 வடக்கு-கிழக்கு மாகாண பொலீஸ் சேவையில் சேர விண்ணப்பித்தோருக்கு அடுத்த வார இறுதியில் (20, 21ம் திகதிகளில்) நேர்முகப் பரீட்சை மற்றும் வைத்திய பரீட்சைகள் நடத்தப்பட உள்ளன.

யாழ்ப்பாணம், திருமலை மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இப் பரீட்சைகள் நடத்தப்படும்.

இந்தப் பரீட்சைகளை நடத்துவதற்காக விசேட குழுவினர் தமிழ் மாவட்டங்களுக்குச் செல்ல உள்ளனர். (அ-எ)

## சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி மீது

### கண் இல்லை என்கிறார் சந்திரிகா

கொழும்பு ஏப்ரல் 9 சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை அடையும் எண்ணம் எனக்கு இல்லை.

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா முன் கண்டவாறு கொழும்புப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஓர் இலட்சியத்துக்காகப் போராடி மரணிக்கவே நான் விரும்புகின்றேன். வெறுமனே மரணிக்க நான் விரும்பவில்லை.

சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவி பற்றி தீர்மானிப்பது அக்கட்சியின் உள்விவகாரம்.

அனுரா பண்டாரநாயக்காவுக்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட கருத்து வேறுபாடு இல்லை. அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகளே எமக்கு இடையில் உண்டு என்று திருமதி சந்திரிகா விஜேகுமாரணதுங்கா சொன்னார். (ஒ-எ)

## குடும்பநல சேவையாளர் பயிற்சி சித்தி அடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம். ஏப். 9 தெல்லிப்பளை சுகாதார பயிற்சி நிலையத்தில் குடும்பநல சேவையாளர்களாகப் பயிற்சிபெற்று சித்திஅடைந்தவர்கள்விவரம் நேற்றுவெளியிடப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விரைவில் நியமனம் பெற இருக்கும் இவர்கள் விவரம் வருமாறு:-

அ. இந்திராணி வத்தளை, ஏ. சந்திரேஸ்வரி உசன், க. யோகராணி புலோலி தெற்கு, க. மங்களேஸ்வரி அல்வாய் தெற்கு, தா. வசந்தாதேவி தையிட்டி புரம், த. இராசலட்சு நீலாவத்தை, சோ. யோலட்சுமி பழுகாமம், க. மகேஸ்வரி காரைதீவு, சு. புவனேஸ்வரி கல்வயல்: சி. காவேரி கோட்டைக் கல்லாறு. பொ. செல்வராணி பாலமுனை, க கணேஸ்வரி தம்பிலுவில், 2. வ- திருஞானச்செல்வி தம்பிலுவில், செ திருமஞ்சனம் காத்தான்குடி, க. சமலாதேவி காரைநகர், சி. மனோன்மணி காத்தான்குடி, ந. சிவனேஸ்வரி சுழிபுரம் வடக்கு, சி. நகுலேஸ்வரி நவாலி தெற்கு. ந. கலைமதி உடுவில், இ. விஜயகுமாரி பெரிய கல்லாறு 3, கு. போகேந்திராதேவி பண்ணாசம் தெற்கு, ம. மேரி அமற்றாஸ் உரும்பிராய் கிழக்கு, ஜே. வசந்தகுமாரி கல்முனை-2, தா. சிவபத்தி யோகபுரம், த. இலங்கேஸ்வரி யோகபுரம், ப. இராசையா பொகவந்தலாவ. ஐ அதிஸ்ட லெட்சுமி பொகவந்தலாவ, ப. கிருஷ்ணவேணி பூநகரி, சு. குணநாயகி கிளிநொச்சி, சி. விமலாதேவி வவுனியா, வே. சந்திரகாந்தா முல்லைத்தீவு, வி. விமலகுமாரி முள்ளியவளை, கா. பரமேஸ்வரி முள்ளியவளை, ந தவநாயகி, முல்லைத்தீவு, கு. கலைவாணி உடப்பு, வி. செல்வராணி முல்லைத்தீவு, மா. இராசலெட்சுமி தம்பலகமம். (இ)

## பாஸ்போர்ட் வழங்கும் பிரிவு

யாழ்ப்பாணம், ஏப் 9 யாழ்ப்பாணத்தில் பாஸ்போர்ட் விண்ணப்பங்களை இந்த வாரம் முதல் ஏற்கும்படி கொழும்பில் இருந்து உத்தரவு வந்ததையடுத்து வேலைகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன.

யாழ் - அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

பெரும்பாலும் இவ்வாரம் விண்ணப்பங்களை ஏற்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படலாம் என்றும், எப்போதிலிருந்து ஆரம்பிப்பது என்பது பற்றி ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படும் என்றும் அரச அதிபர் தரிவித்தார்.

பாஸ்போர்ட் வழங்கும் பிரிவு யாழ். செயலகத்தில் இயங்கும். (இ-3)

## கிறிஸ் நட்டால் இடமாற்றம்

கொழும்பு, ஏப்ரல் 9 பி. பி. சி. யின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்நட்டால் இடமாற்றம் செய்யப்படுகிறார்.

திரு. கிறிஸ்தோப்பர் மொரிஸ்த புதிய கொழும்புச் செய்தியாளராக எதிர்வரும் மே. மாதம் நடுப்பகுதியில் பதவி ஏற்க இருக்கிறார்.

இதனிடையில், பி. பி. சி, வானொலியின் கிழக்கு சேவையின் பிரதித்தலைவரான திரு. டேவிட்பேஜ் இம்மாதம் கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

பி. பி, சி. யின் புதிய கொழும்புச்செய்தியாளர் திரு. மொரிஸ் பி. பி. சி. செய்திச் சேவை அறையில் பிரதம உதவி ஆசிரியராக தற்போது பணிபுரிந்து வருகிறார். (அ-எ)

## சங்கீத சபை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப் 9 வட இலங்கை சங்கீத சபையின் ஆறாம்தரப் பரீட்சார்த்திகளுக்கான கருத்தரங்கும், களப்பயிற்சியும் இன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவிருக்கிறது.

இந்தக்கருத்தரங்கைமாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இன்று காலை 9மணிக்கு ஆரம்பித்து வைப்பார்.

கல்வி அதிகாரி திரு. என். சுந்தரலிங்கம், பேராசிரியர் வ. ஆறுமுகம் ஆகியோர்கருத்துரை வழங்குவர்கள்.

இந்தக் கருத்தரங்கு தொடர்ந்து [illegible] நடைபெறும். [இ-3[

## நட்புறவு ஒப்பந்த பேச்சு முதலில் அதிகாரிகள் மட்டத்தில்

கொழும்பு, ஏப் 9 உத்தேச நட்புறவு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் முதலில் இலங்கை, இந்திய அதிகாரிகள்மட்டத்தில் நடத்தப்படும்.

அதற்கான திகதி விரைவில் நிர்ணயிக்கப்படும்என்று ஜனாதிபதியின்சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர்பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

நட்புறவு உடன்படிக்கை இலங்கை தெரிவித்த பதில் யோசனைகளுக்கான பதிலை இந்தியா அனுப்பிவிட்டது.

அதனை தக்போது ஜனாதிபதி பரிசீலித்து வருவதாகவும் திரு பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

இதேவேளை மாகாணசபை முறையை விட தமிழர்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்யக்கூடியதும் உறுதிப்படுத்தக்கூடியதுமான மாற்றுத் திட்டம் ஒன்று குறித்து அரசு உயர்மட்டம் ஆராந்து வருவதாகத் தெரியவருகிறது. [ஒ-7]

## திருமலையில் நேற்று படையினரின் கலை நிகழ்ச்சி

### புலிகளுக்கு நன்றி தெரிவிப்பு

திருகோணமலை, ஏப் 9 தமிழ்-சிங்கள புத்தாண்டையொட்டி திருகோணமலையில் நேற்று கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

முப்படையினரும் பொலீஸாரும் இணைந்து கலை நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர். இதற்கான முழு ஒத்துழைப்பையும் விடுதலைப்புலிகள் வழங்கி இருந்தனர்,

முற்றவெளி மைதானத்தில் நடந்த நிகழ்ச்சிகளில் அதிக எண்ணிக்கையான தமிழ், சிங்கள மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர்.

தமிழ் - சிங்கள மக்கள் இடையே புரிந்துணர்வையும் அன்னியோன்ய நிலையை ஏற்படுத்தவும் இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கலை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்த வேளையில் ''கலைநிகழ்ச்சிகளுக்கு முழு ஒத்துழைம்பு வழங்கிய விடுதலைப் புலிகளுக்கு நன்றி தெரிவிப்பதாக'' பலமுறை அறிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

## இலங்கை வங்கி கருமபீடம்

யாழ்ப்பாணம், ஏப் 9 மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இலங்கை வங்கி கருமபீடத்தை மானிப்பாய் கொத்தணி அதிபர் திரு. சி. கேசவராஜா இன்று 9 ஆம் திகதி மாலை 5 மணிக்குத் திறந்து வைப்பார்.

நாளை10ஆம் திகதி இந்தக் கருமபீடம் ஓய்வுபெற்ற ஸ்கந்வரோதயாக் கல்லூரி அதிபர் திரு. சி. சுப்பிரமணியத்தால் திறந்து வைக்கப்படும். [இ]

## மரணஅறிவித்தல்

நயினாதீவு

### திருமதி நாகரெத்தினம் நாகேசு

நயினாதீவு 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நாகரெத்தினம் நாகேசு 08-04-1990 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற தம்பையா நாகேசு அவர்களின் அன்பு மனைவியாரும், சிவராசசிங்கம் (கனடா), சுதந்திராதேவி (வீடமைப்புத் திணைக்களம்), வசந்தாதேவி, சகுந்தலாதேவி (ஜேர்மனி), ஜெகராசசிங்கம் (சட்ட விரிவுரையாளர், அவுஸ்திரேலியா), ஜெயராசசிங்கம் (சவூதி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. கணபதிப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், திரு. தம்பையா தையலம்மை தம்பதிகளின் அருமை மருமகளும், ஏகநாயகிவல்லி (ஆசிரியை), தனபாலசிங்கம் (பயணப் படகு உரிமையாளர் - நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவலர்), தவகுகதாசலிங்கம் (ஜேர்மனி), கிஜானி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், சோமசுந்தரம் (ஆசிரியர்), காலம்சென்ற சிவக்கொழுந்து, பாலசிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரியும், காலம்சென்ற வேலாயுதபிள்ளை கனகம்மா, மாசிலாமணி, பழனிவேலு, சீதாலெட்சுமி, தனபாலசிங்கம், கந்தையா (ஆசிரியர்), பரஞ்சோதி, சத்தியேஸ்வரி, கமலாம்பிகை (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும், அபிமன்யு, அன்பரசி, அறிவரசி, அருள், நாகேசு, அருளரசி, தமிழரசி, கார்த்தீபன், தவப்பிரியா, பவித்திரா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நயினாதீவில் நடைபெறவுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. தனபாலசிங்கம்

நயினாதீவு. [12182]

## மரண அறிவித்தல்கள்

### திரு. கந்தையா தனபாலசிங்கம்

(புடவை நெசவாளர் சங்கம் - கோண்டாவில்)

கச்சேரி கிழக்கு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் 07 - 04 - 1990 சனிக்கிழமை காலமானார். இவர் கோமளேஸ்வரியின் (நெசவு போதனா ஆசிரியை நல்லூர்) அன்புக் கணவரும், ஜெயந்தினி, ஜோதீசன், ஜெகதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரட்ணசிங்கம் (தினபதி ஆசிரியர்) குணபாலசிங்கம் (சாமுவேல் அன்ட் சன்ஸ்), சுந்தரலிங்கம் (தபால் கந்தோர்), மகேந்திரலிங்கம் (விலைமதிப்புத் திணைக்களம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09 - 04 - 90 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு கைதடி நுணாவில், குச்சப்பிட்டி மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
சோ. தங்கராசா

வாகையடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. [3159]

### திரு. தேவசகாயம் செபமாலை

(குணம்)

[முன்னாள் ராக்ஸி உரிமையாளர்]

ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த தேவசகாயம் செபமாலை 08-04-1990 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் 09-04-1990 திங்கட்கிழமை மாலை 3-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து ஆனைக்கோட்டை காக்கைதீவு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. [12178]

### வயிரகப்பிள்ளை சின்னத்தங்கம்

திருமதி வயிரகப்பிள்ளை சின்னத்தங்கம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரகப்பிள்ளையின் (மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி சிவனேசம், திருமதி சிவபாக்கியம் (மலேசியா), பாலசுப்பிரமணியம் (வருமான வரி, கொழும்பு), திருமதி சிவபூரணம் (அமெரிக்கா), Dr. சிவஞானவேல் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற திரு. கனகராயர், சகுந்தலாதேவி, Dr. சுந்தரலிங்கம் (அமெரிக்கா), Dr. சாரதாதேவி (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கீரிமலையில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
வ. பாலசுப்பிரமணியம்

பன்னாலை,
தெல்லிப்பளை. [12180]

### எலென் ஞானம்மா பெரியதம்பி

திருமதி எலென் ஞானம்மா பெரியதம்பி காலமானார்.

இவர் காலஞ்சென்ற S. S. பெரியதம்பியின் அன்பு மனைவியும், நேசமலர், இராசமலர், செல்வமலர், பூபதி, அரியமலர், மகிழ்மலர் (கனடா), இரட்னமலர் (ஆசிரியை, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), Dr. அரியராஜ் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, ஸ்ரீபின், தர்மானந்தன், செல்லத்தம்பி, பரணிருபசிங்கம், சிவஞானம் (கனடா), புவனரத்தினம் (ஆசிரியர், பரி யோவான் கல்லூரி), சுகாந்தினி (இங்கிலாந்து) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சுகிர்தமலர், பூரணம் (U.S.A), மேரி ஆகியோரின் சகோதரியும், வதன், ஜெயகுமார் (Engineer), இராஜ்குமார் (கனடா), றஞ்சி, Dr. ஜெயந்தி வசந்தன் (Pastor), நறேன் (Engineer), மகேன், றவி, ஜீவன், சாமினி, தீபன், சுஜி, சுகுமார், சுஜிற், நிறஞ்சன், நிரூபன், நிறஞ்சனா, லஷ்மன், சுமித்திரன், றஜீவ் ஆகியோரின் பேத்தியும், றெபெக்கா, பிறிசிலா, நிறான், லிலாந்தி, ஹரீந்திரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை அவரது இல்லத்தில் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-45 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பரி. யோவான் சேமக்காலையில் பிற்பகல் 3-30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
K. புவனரத்தினம்

68/2, கச்சேரி-நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். [12181]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org